இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணி பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 05
இறுதிப்பரீட்சை – 2008
**LWU 3311**– நிருவாகச்சட்டம்
காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி: 02.04.2008 நேரம்: மு.ப 9.30 – பி.ப 12..30

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக்

தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

01 'தற்துணிபதிகாரம்' எனும்போது அதிகாரிகளின் தற்துணிபதிகாரத்தில் செய்யப்படவேண்டிய சிலவற்றை கூறிய போதிலும் அவை தனிப்பட்ட அபிப்பிராயங்களுக்கு அமையவல்லாமல் நீதி நியாயத்தின் விதிகளுக்கமைய செய்யப்பட வேண்டும் என்பதையே கருதுகின்றது. - H.W.D.Wade & C.F Forsyth, நிருவாகச்சட்டம் 7வது அத்தியாயம் பக்கம் 387.

இக் கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? நிருவாக செயற்பாடுகள் தொடர்பில் நீதிமுறைக் கட்டுப்பாடு என்பதுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

02. ரொபட் சூரிட்டானியாவின் டாக்கோட்ட காவல் நிலையத்தின் ஓர் காவல் உத்தியோகஸ்தர் (Constable) ஆவார். சட்டவிரோதமாக மதுபானம் காச்சுபவரிடமிருந்து ரொபட் லஞ்சம் பெற்ற குற்றச்சாட்டுத்தொடர்பில் டாகோட்ட காவல் நிலைய உதவி மேலதிகாரி(ASP) ஆரம்பக்கட்ட புலனாய்வினை மேற்கொண்டார். ரொபாட்டின் குற்றத்தினை நிரூபிக்க விசாரணையின் போது முன்வைக்கப்பட்ட சான்றுகள் திருப்திகரமானதாக இல்லாமையால் உதவி காவற்துறை மேலதிகாரி அவரை எச்சரித்து குற்றச்சாட்டில் இருந்து விடுவித்தார். பின்னர் ரொபட் லஞ்சம் பெற்றுக் கொண்டிருக்கும் போது உதவிக்காவல்துறை மேலதிகாரியால் (ASP) கையும் மெய்யுமாக பிடிபட்டார். உதவிக்காவல் மேலதிகாரி(ASP) ரொபட்டை இடைநிறுத்தியதுடன் காவல்துறை அதிகாரிகளின் பதவியுயர்வு மாற்றம் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை போன்றவை தொடர்பில் நியதிச்சட்டட்ட அதிகாரமளிக்கப்பட்ட காவல்துறை சேவைகள் ஆணைக்குழுவிற்கு விடயத்தைப் பாரப்படுத்தினார்.

காவல்துறை சேவைகள் ஆணைக்குழு விசாரணையை நடத்தியது. டாகோட்ட உதவி காவல்துறை மேலதிகாரி குழுவிசாரணைக்கு தலைமை தாங்கினார். விசாரணைக்கு முன்னைய நாள் ரொபட்டிற்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது. தான் விசாரணைக்கு சமூகமளிக்க பிறிதொரு நாளைத் தரும்படி ரொபட் வேண்டுகோள் விடுத்தான். இரண்டு வருட புலமைப்பரிசிலுக்காக மறுநாள் தான் நாட்டை விட்டு வெளியேற வேண்டியிருப்பதனால் விசாரணையை ஒத்திவைக்க முடியாது என விசாரணைக் குழுவின் தலைவர் தெரிவித்தார். அனைத்து சாட்சிகளையும் கேள்விக்குட்படுத்த ரொபட் அனுமதிக்கப்பட்ட அதேவேளை சட்டத்தரணி ஒருவரை அமர்த்துவதற்கான அவனது வேண்டுகோள் விசாரணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டது. உடனடியாக அமுலுக்கு வரும் வண்ணம் அவன் சேவையிலிருந்து விலக்கப்பட்டமை தொடர்பாக காவல்துறை சேவைகள் ஆணைக்குழுவின் தலைவரால் ஒரு வாரத்திற்கு பின்னர் ரொபட் அறிவிக்கப்பட்டான்.

தீர்மானத்தை ஆட்சேபிக்க ரொபட் விரும்புகிறான். அவனுக்கு ஆலோசனை வழங்குக.

03. “பதிவேட்டின் முகத் தோற்றத்தில் பிழை என்பதன் அடிப்படையில் கீழ் நிலை நியாய சபைகளினால் எடுக்கப்படும் தீர்மானங்களை, அத்தீர்மானங்களை ரத்து செய்வதற்கான அடிப்படைகளில் ஒன்றாக உறுதிகேள் எழுத்தாணை வழங்குவது இப்போது தீர்மானிக்கப்பட்ட சட்டமாகும்.” – வீரசூரிய S.P.J in Hayleys Ltd v.de Silva (1962) 64 NLR 130 at 137.

நீர் உடன்படுகின்றீரா? தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் தொடர்புபடுத்தி உமது விடைக்கான காரணங்களைத் தருக.

04. உணவுவகைகளின் உற்பத்தியாளர்களுக்கு வாணிப உரிமங்களை(Trade license) வழங்குவதற்கான விண்ணப்பங்களைக்கோர வர்த்தக மற்றும் உள்ளக வாணிப அமைச்சருக்கு, உணவுச் சட்டத்தின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. உற்பத்தியாளர்களின் உணவு வகைகளின் மாதிரிகளை பரீட்சிக்க தரக்கட்டுப்பாட்டாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை வர்த்தக மற்றும் உள்ளக வாணிப திணைக்களத்திற்கு நியமிப்பதற்கு அமைச்சரை சட்டம் அனுமதித்தது. குழுவின் பரிந்துரையை அடிப்படையாக வைத்து ‘அப்படிச்செய்வது பொருத்தமானது’ என கருதும் சந்தர்ப்பத்தில் உற்பத்தியாளனுக்கு வாணிப உரிமத்தினை வழங்குவதற்கு அமைச்சர் வேண்டப்பட்டிருந்தார்.

உணவு வகைகளின் உற்பத்தியாளனான நன்கு அறியப்பட்ட சுரநிமல், பக்கற் பண்ணப்பட்ட பால், போத்தலில் அடைக்கப்பட்ட பால் மற்றும் விதம்விதமான சாற்றுடன் கூடிய யோகட் உள்ளடங்களான தனது பால் உற்பத்திக்கு உரிமத்தை பெற விண்ணப்பித்தான். தராதரத்திற்கு ஏற்ற அடிப்படையில் அவனது தயாரிப்புக்கள் இல்லையெனும் அடிப்படையில் சுரநிமலால் செய்யப்பட்ட விண்ணப்பம் குழுவிற்கு மாதிரிகள் அனுப்பப்படாமலேயே அமைச்சரால் பாலுற்பத்திற்கான உரிமம் வழங்கப்படாது மறுக்கப்பட்டது.

எப்படியிருப்பினும் குழுவின் பரிந்துரையைப் பெறாது அமைச்சரின் சகோதரியின் மருமகனான மற்றுமொரு பாலுற்பத்தியாளனுக்கு அமைச்சர் உரிமத்தை வழங்கியமையை சுரநிமல் பின்னர் கண்டறிகின்றான். சந்தையில் கிடைக்கக்கூடியதாக உள்ள ஏனைய பால்லுற்பத்திகளுடன் ஒப்பிட்டுப்பார்க்கும் போது சுரநிமல் தனது உற்பத்திக்கு குறைந்த விலையினையும் உயரந்த தரத்தினையும் பேணுகின்றான். இந்த வியாபாரத்திற்காக அவன் வங்கிக்கடன் ஒன்றைப் பெற்றதாகவும் தனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டமையானது தனக்கு பெரியளவிலான பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவன் மேலும் கோருகின்றான்.

நிருவாகச்சட்டம் எனும் பரப்பிற்குள் நீதிமன்றங்களால் அபிவிருத்தி செய்யப்பட்ட பொருத்தமான கொள்கைகளுடன் தொடர்புபடுத்தி இப் பிரச்சினைகளை அராய்க.

05. ‘பரிகாரமளிக்க நியாயஸ்தலத்திற்கு(Forum) நியாயாதிக்கம் உள்ளது எனும் முரண்பாட்டின் மீது நிருவாக நடவடிக்கைகளை கேள்விக்குட்படுத்தும் செயற்திறம் மிக்க கருவியான விளம்பல் கட்டளையின் முக்கியத்துவம் அழிக்கப்பட்டுள்ளது.’

விளம்பல் கட்டளை வழங்குவது தொடர்பிலான நியாயாதிக்கப் பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தி இக் கூற்றை ஆராய்க.

06. பொதுத் தேவைகளான இலவச ஆரோக்கிய சேவை (sanitary ) படகுச் சேவை(boat) நீர் மற்றும் மின்சார சேவைகளை வழங்க, தூய சுற்றாடலைப் பராமரிக்க வீதிகள், சிறு தெருக்கள், மைதானங்களின் குப்பைகள் அகற்றுதலை உறுதிப்படுத்துவதுடன் ஆற்றுமேடைகளை பராமரிக்க மற்றும் ஏனைய நடவடிக்கைகளை எடுக்க ‘சிவபுரியின்’ உள்ளூராட்சி மன்றத்திற்கு நியதிச்சட்ட அதிகாரமளிக்கப்பட்டிருந்தது. மோட்டார் வண்டிகள் தூய்மைப்படுத்தும் சேவைகள் நிலையம் ஒன்று பாவித்த இயந்திர எண்ணெய் உட்பட தமது கழிவுகளையும் கழிவு நீரையும் கடத்த சில மாதங்களாக ஆற்றுக்குள் விடுவித்தது. இத்தகைய செயற்பாடுகள் கிராமத்தவர்களுக்கு விசேடமாக பொருட்கள் எடுத்துச் செல்ல ஆற்றினைப் பயன்படுத்தியோருக்கும், பயிர்செய்கைக்காகவும் மற்றும் வீட்டுத்தேவைகளுக்காகவும் நீராடலுக்கும் நீரை பயன்படுத்துவோருக்கு பாரிய தொல்லையை ஏற்படுத்தியது. கழிவுத் தயாரிப்புக்களின் மூலம் ஆற்று நீரை (contamination) அசுத்தமாக்கியதன் விளைவாக கிராமத்து சிறுவர்கள் சுகயீனமுற்றனர். மோட்டார் வண்டிகள் தூய்மைப்படுத்தும் சேவைகள் நிலையத்தின் செயற்பாடுகளின் விளைவாக தாம் முகங்கொடுக்கும் சுகாதார சிக்கல்கள் தொடர்பாக பல முறைப்பாடுகளை எழுத்து மூலம் கிராம வாசிகள் ‘சிவபுரி’ உள்ளூராட்சி மன்றத்தின் தலைவருக்கு செய்த போதிலும் குறிப்பிட்ட செயற்பாடுகளை நிறுத்துவற்கு எத்தகையதொரு பயன்பதரு நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

தங்களுக்கு ஏதேனும் பரிகாரம் உண்டா என ‘சிவபுரி’ கிராமவாசிகள் உமது அறிவுரையை நாடுகின்றனர். அவர்களுக்கு அறிவுரை செய்க.

07. பிரிட்டானிக்கா மின்சாரசபையானது (BEB) பிரிட்டானிக்கா பாராளுமன்ற சட்டத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட நியதிச்சட்ட அங்கமாகும். BEB கடுமையான சுகவீனத்திற்கான பொதியொன்றை தனது ஊழியர்களுக்காக அறிமுகப்படுத்தியது. சபையால் தயாரிக்கப்பட்ட பட்டியலில் குறிக்கப்பட்ட ஏதேனும் நோயால் துன்பப்படும் ஒருவர் நிரந்தர ஊழியனாகவும், ஐந்து வருடங்களுக்கு குறையாத சேவையை பூர்த்தி செய்தவனுமாக இருக்கும் போது மேலே குறிப்பிடப்பட்ட பொதிக்கமைய சபையிடமிருந்து நிதி உதவியை நாட உரித்துடையவனாவான்.

“எந்த விடயத்திலும் சபையின் தீர்மானமானது இறுதியும் முடிவானதும் ஆகும், என்பதுடன் எந்த ஒரு நீதிமன்றத்தினாலும் அதனைக் கேள்விக்குட்படுத்த முடியாது.” என இச்சட்டத்தின் பிரிவு 3 கூறுகின்றது. 12 வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிய ஜோன் பிரிட்டானிக்கா மின்சாரசபையின் (BEB) உதவிப் பொது முகாமையாளனாவான். பட்டியல் படுத்தப்பட்ட நோய்களில் ஒன்றான இருதயத்திற்கு இரத்தம் எடுத்துச்செல்லும் குழாய் அடைத்தல் (Coronary Artery disease) எனும் நோய்க்கு சத்திர சிகிச்சை செய்ய வேண்டியிருந்ததால் நிதி உதவிக்காக விண்ணப்பித்தான். ஆனால் அவன் நல்ல ஊதியத்தைப் பெறுகின்றான் என்பதால் அவனுக்கு நிதி உதவி தேவை இல்லை என்ற

அடிப்படையில் பிரிட்டானிக்கா மின்சாரசபையால் (BEB ) அவனது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டது. அவன் சபையின் தலைவரை சந்தித்து அத்தீர்மானத்தைப் பற்றி விசாரித்த போது, சபையின் தலைவன் எனும் ரீதியில் தனது முடிவு (தீர்மானம்) உறுதியானது என சபைத்தலைவர் கூறினார்.

ஜோன் தன்னால் பிரிட்டானிக்கா மின்சாரசபையின் (BEB) தீர்மானத்தை நீதிமன்றம் ஒன்றில் ஆட்சேபிக்க முடியுமா என உம்மை ஆலோசிக்கின்றான்.

பிரிட்டானிக்காவின் சட்டம் இலங்கையை ஒத்ததென எண்ணி ஜோனுக்கு அறிவுரை செய்க.

08. 'நவீன காலத்தில் நிருவாக இயந்திரத்தின் கீழான செயற்பாட்டிற்கு கையளிக்கப்பட்ட சட்டவாக்கங்கள் அவசியமாகின்றன. எப்படியிருப்பினும் பிரஜைகளின் அக்கறையை பாதுகாப்பதற்காக அவை சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாக இருக்க வேண்டும்.'

கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்தின் மீதான நீதித்துறைக் கட்டுப்பாடு என்பதுடன் தொடர்புறுத்தி இக் கூற்றை ஆராய்க.

(பதிப்புரிமையுடையது)